[10th September 1960

SRI A. VEDARATHNAM: அப்படியில்லையானால், இப்போது உச்சவரம்புச்சட்டம் கொண்டு வர கால தாமதம் ஆவதற்கு அதுதான் காரணமோ என்று விவசாயிகள் ஐயுறுகிறார்கள். ஆகவே அது காரணம் இல்லையானால் இப்போது இருக்கின்ற காலதாமதத்தை தவிர்க்கும் வகையில், விவசாயிகளுக்கு அனுகூலமாக நிலங்களை விற்பதற்கு போட்டிருக்கின்ற தடையை இச்சட்டம் வருகின்றவரையாவது மாற்றி வைக்க அரசாங்கம் முன் வருமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: இப்போது கால தாமதம் ஒன்றும் ஏற்படவில்லை. பொறுக்குக் கமிட்டி இதைப் பற்றி எல்லாம் பரிசீலனை செய்வதற்காக வருகின்ற 19-ம் தேதியிலிருந்து சிதம்பரம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி போன்ற இடங்களுக்குப் போகின்றது. இதில் வேண்டிய நடவடிக்கைகள் எல்லாம் பிரோகிராம்படிதான் நடந்துகொண்டு வருகிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் இப்போது போட்டிருக்கும் சட்டத்திற்கு ஏதாவது விதிவிலக்கு கொடுக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஏற்கனவே இதற்கு வேண்டிய சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டு விட்டது என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். ஆகவே இதற்கு என்று ஒரு பில் கொண்டு வந்து பின்னால் இந்த மாதிரி ஒன்றும் செய்ய வேண்டியதில்லை.

Small-pox

*615 *Q*.—SRI S. M. ANNAMALAI: கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) ஜவ்வாது மலையில் உள்ள கிராமங்களில் பெரியம்மை பரவியிருப்பது உண்மையா?

(ஆ) அப்படியானால் எத்தனை பேர்கள் இறந்தார்கள்?

(இ) அதைப் போக்க சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்ன?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) Sporadic cases have been reported from one village only.

(*b*) One.

(*c*) Intensive vaccination work has been carried out to arrest the infection.

SRI S. M. ANNAMALAI: அந்த கிராமத்தில் அம்மை பரவி இருக்கிற தகவல் எப்பொழுது தாசில்தாருக்கு தெரியும் என்று சொல்ல முடியுமா? அந்த இடத்தில் ஏதாவது அம்மை போன்ற நோய்கள் வந்தால் கவனிப்பதற்கு காடாம்புலியூர் என்ற இடத்திலுள்ள பிரைமறி ஹெல்த் சென்டர்தான் உபயோகப்பட வேண்டும். அதோடு ஜவ்வாது மலையிலிருந்து மொபைல் யூனிட்டை ஆயங்காலத்திற்கு மாற்றிவிட்டார்கள்.

10th September 1960]

இதனால் உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியவில்லை. ஆகவே ஜவ்வாது மலையில் ஒரு வைத்தியசாலையை ஏற்படுத்த அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: தகவல் எப்போது அதிகாரிக்கு வந்தது என்கின்ற தகவல் என்னிடம் இல்லை. குறிப்பிட்ட அந்தக் கிராமத்தில் இந்த நோயினால் இரண்டு பேர்கள் பாதிக்கப்பட்டதாகவும், அதில் ஒருவர் இறந்து போய்விட்டார் என்றும், ஒருவர் பிழைத்துக் கொண்டார் என்றும் தகவல் இருக்கிறது. அந்த கிராமமே மிக சிறிய கிராமம். மொத்த ஜனத்தொகையே 250 பேர்கள்தான். இதற்கு பிற்பாடு வேறு எந்த கேஸூம் வந்திருப்பதாக தகவல் இல்லை.

Harijan Uplift

* 616 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 1959–60-ம் வருஷத்தில் ஹரிஜன நலனுக்காக பட்ஜெட் நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட தொகையில் செலவழிக்கப்படாமல் கவர்மெண்டுக்கே திருப்பி அனுப்பப்பட்ட தொகை எவ்வளவு ?

(ஆ) எந்தெந்த இனங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகையில் எவ்வளவு தொகை செலவழிக்கப்படவில்லை ?

THE HON. SRI P. KAKKAN: (*a*) The overall expenditure on "Harijan Uplift" during the year 1959–60 is in excess of the allotment.

(*b*) There were, however, savings in the following heads of expenditure as detailed below :—

Head of account.	*Final allotment including supplementary grants.*	*Expenditure.*	*Savings.*
(1)	(2)	(3)	(4)
	RS.	RS.	RS.
A. Direction (Administration) ..	2,89,500	2,81,041	8,459
H. Schemes for the Welfare of Denotified Tribes (i) Aziznagar settlement.	96,500	79,619	16,881
J. Schemes for the Welfare of Backward Classes (i) Schemes with full grant.	2,00,000	1,39,330	60,670

(But the savings were untilized to meet in part the excess expenditure under the other heads of accounts)

SRI P. G. MANICKAM: சர்க்கார் பட்ஜெட்டில் ஒதுக்கிய தொகையைவிட அதிகமாக செலவு செய்யப்பட்டிருக்கிறது என்பது வாஸ்தவம்தான். எந்தெந்த ஜில்லாக்களுக்கு எந்தெந்த இனங்களில் ஒதுக்கப்பட்டிருந்த பணம் செலவு செய்யாமல் திருப்பி அனுப்பப்பட்டன என்கின்ற புள்ளி விவரங்களை தெரிவிக்க முடியுமா ?

THE HON. SRI P. KAKKAN: கனம் அங்கத்தினர் அவர்கள் ஜில்லாவாரியாக விவரங்கள் கேட்கின்றார்கள். அதற்கு தனிக் கேள்விதான் போட வேண்டும்.